TAMIL

fka CHILDREN'S SERVICES INC

# உங்கள் குடும்ப மொழி[களை] பராமரித்தல்

உங்கள் குடும்ப மொழியைப் பராமரிப்பது, பிந்தைய எல்லா மொழியின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகிறது. வலுவான மொழி மாதிரிகளுடன் பார்ப்பதற்கான, கேட்பதற்கான மற்றும் தகவல்தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்போது, உங்கள் குழந்தையால் பல மொழிகளை எளிதாகப் பெற முடியும்.

விக்டோரியாவிலுள்ள இளம் வயது தொழில்வல்லுநர்கள், *விக்டோரியன் இளம் வயதுக் கற்றல் மற்றும் மேம்பாட்டு கட்டமைப்பால்* (VEYLDF) வழிநடத்தப்படுகிறார்கள். கட்டமைப்பானது, பன்மொழியியலை ஒரு சொத்தாக அங்கீகரித்து, இளம் வயதுக் கல்வி மற்றும் பராமரிப்பு நிகழ்ச்சிகளில் (VEYLDF, 2016) கலந்து கொள்ளும்போது குழந்தைகள் தங்கள் குடும்ப மொழி[களை] பராமரிக்கவும், ஆங்கிலத்தை கூடுதல் மொழியாகக் கற்கவும், ஆங்கிலம் அல்லாத பிற மொழிகளைக் கற்கவும் ஆதரிக்கப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பை நிலைநாட்டுகிறது.

தனது குடும்ப மொழி[களை] பராமரிப்பதிலும் தொடர்ந்து மேம்படுத்துவதிலும் உங்கள் குழந்தைக்கு பல நன்மைகள் உள்ளன:

- உங்கள் குடும்ப மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் உங்கள் குழந்தையால் தனது அறிவுசார்ந்த நெகிழ்வுத்தன்மையையும் மேம்பாட்டையும் நீட்டிக்க முடியும்.
- உங்கள் குடும்ப மொழி[களை] பராமரிப்பதானது, குடும்ப உறவுகளுக்கும், தொடர்புகளையும் உருவாக்குவதற்கும், சொந்தமானது எனும் உணர்விற்கும் அவசியமாகும்.
- குடும்ப மொழி[கள்] உங்கள் குழந்தையின் அடையாளம், கலாச்சாரம் மற்றும் நல்வாழ்வுடன் பிரிக்கமுடியாத வகையில் பிணைந்துள்ளன.
- உங்கள் குடும்ப மொழி[களில்] சரளமாகப் பேசுவது, ஆங்கிலம் போன்ற கூடுதல் மொழிகளைக் கற்க உங்கள் குழந்தைக்கு உதவுகிறது.

VEYLDF (2016), 'முதல் அல்லது வீட்டு மொழிகளைப் பெற்று பராமரிப்பது என்பது அடையாளத்தை நிர்மாணிப்பதில் குறிப்பிடத்தக்க மற்றும் தொடர்ச்சியான பங்கைக் கொண்டுள்ளது' என்பதைக் கல்வியாளர்களுக்கு விளக்குகிறது (பக்கம். 18). எனவே, ஆங்கிலத்தை ஒரு கூடுதல் மொழியாக மேம்படுத்துவதை ஆதரிப்பதன் ஓர் அத்தியாவசியக் கூறானது, கல்வியாளர்கள் மற்றும் குடும்பத்தினர் தங்கள் குடும்ப மொழி[களை] பராமரிக்கவும் வளர்க்கவும் குழந்தைகளை ஊக்குவிப்பதில் மற்றும் ஆதரவளிப்பதில் கூட்டுப்பணியில் ஈடுபடுவதற்கானது.

## இளம் குழந்தைப் பருவக் கல்வி மற்றும் பராமரிப்புச் சூழல்களில் ஆங்கிலத்தை கூடுதல் மொழியாக உருவாக்குதல்

விக்டோரியன் இளம் குழந்தைப் பருவக் கல்வி மற்றும் பராமரிப்புச் சூழல்களில் உங்கள் குழந்தைக்கு ஆங்கிலம் கற்க பல வாய்ப்புகள் கிடைக்கும். 'மொழிக்கு வெளிப்படுவது, வெளிப்படையான மாதிரியாயிருந்து மொழியைக் கற்பித்தல், புதிய மொழியைப் பெறுவதற்கு பொருத்தமான நேரம் ஆகியவற்றின் மூலம் குழந்தைகளால் கூடுதல் மொழியாக ஆங்கிலத்தை (அல்லது மற்றொரு மொழி) வெற்றிகரமாகக் கற்றுக்கொள்ள முடியும்' என்று ஆராய்ச்சி கூறுகிறது (VEYLDF, 2016, பக்கம். 22).

ஒரு மொழியைத் தெரிந்துகொள்வதானது, மற்ற மொழிகள் எப்படி வேலை செய்கின்றன என்பதை குழந்தைகள் புரிந்துகொள்ள உதவலாம். குழந்தைகள் ஒரு மொழியில் வளர்த்துக்கொள்ளும் திறன்களை புதிய மொழிக்கு மாற்றலாம். குடும்ப மொழியின் மூலம் குழந்தைகளால் புதிய மொழி, அதன் விதிகள், சொல்லகராதி ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முடியும். உங்கள் குழந்தை ஓர் ஆங்கில மொழிச் சூழலில் மூழ்கியிருக்கும்போது, அவர்கள் பல்வேறு சூழல்களில் ஆங்கிலத்தைக் கேட்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். அவர்கள் மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாட விரும்புவார்கள் மற்றும் கல்வியாளர்கள் உங்கள் குழந்தைக்கு ஆங்கிலத்தைக் கேட்பதற்கும் பயிற்சி செய்வதற்குமான நல்ல மாதிரிகளையும் பல வாய்ப்புகளை வழங்குவார்கள்.

ஒரு குழந்தையின் முந்தைய மொழி அனுபவங்கள், புதிய மொழிக்கான வெளிப்பாடு, அவர்கள் கற்றுக் கொள்ளும் புதிய சூழல்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப மொழித் திறன்கள் வளரும். ஒரே நேரத்தில் பல மொழிகளைக் கற்கும் குழந்தைகள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு மொழியை விட மற்றொரு மொழியை அதிகமாகப் பேசலாம். ஆரம்பத்தில் குழந்தைகள் பேசும்போது மொழிகளைக் கலக்கக்கூடும். அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வார்த்தை ஒரு மொழியில் தெரிந்திருக்கும், மற்ற மொழியில் தெரியாதிருக்கும். அவர்களின் உரையாடலின் சரளத்தைப் பராமரிக்க, அவர்கள் தங்களுக்குத் தெரிந்த வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். இது ஓர் இயற்கையான, நெகிழ்வான திறன் ஆகும், ஏனெனில் அவர்கள் பன்மொழிச் சூழல்களில் தங்கள் மொழிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

## நினைவில் கொள்க...

ஒரு புதிய மொழியில் உரையாடலின் சரளத்தை மேம்படுத்த நேரம் தேவைப்படும், மேலும் குழந்தைகளுக்கு கூடுதல் மொழியைக் கற்கும் செயல்முறைகளின்போது அவர்களைச் சுற்றியுள்ள பெரியவர்களிடமிருந்து நேரமும் அழுத்தமில்லாத ஆதரவும் தேவை.

தங்கள் குடும்ப மொழி[களை] பயன்படுத்தவும் கற்கவும் அனைத்து குழந்தைகளும் உரிமை உள்ளது (UNCRC, 1989).

**மேற்கோள்கள்**

கல்வி மற்றும் பயிற்சித் துறை, 2016. *விக்டோரியன் இளம் வயது கற்றல் மற்றும் மேம்பாட்டுக் கட்டமைப்பு.*

UNICEF, 1989. *குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு* (UNCRN).